# இலங்கையில் காணி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒரு வழிகாட்டி

# இலங்கையில் காணி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒரு வழிகாட்டி

காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பு

© Law & Society Trust and People's Alliance for Right to Land,
2024

ISBN 978-624-5545-24-7

Published by
Law and Society Trust
3, Kynsey Terrace,
Colombo 08,
Sri Lanka
Tel: + 94 (0) 112684845
Fax:  +94011-2686843
Email: admin@lstlanka.org
www.lstlanka.org

People's Alliance for Right to Land
Email: parlnetworksl@gmail.com

www.parlsl.com

Printed by Imageway

# அறிமுகம்

இலங்கையில் நகரத்துக் காணிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய தகவல்களை வழங்குவதையும் வழிகாட்டலை வழங்குவதையும் இந்த வழிகாட்டி நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 5 பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது

1 **காணியினைப் புரிந்துகொள்ளல்**
இலங்கையில் உள்ள காணிகளின் வகைகள் மற்றும் அவை எவ்வாறு நிர்வகிக்க-ப்பட்டுப் பெற்றுக்கொள்ளப்படுகின்றனஇ

2 **பிரதான திட்டங்களைப் புரிந்துகொள்ளல்**
தொழில்நுட்ப ஆவணங்களையும் அபிவிருத்தித் திட்டங்களையும் எவ்வாறு புரிந்துகெ-ாள்வது

3 **வெளியேறுமாறு கூறப்படல்**
உங்களின் காணி கொள்ளப்படுகையில் (வேறு ஓர் அதிகாரம் அதனை எடுக்கையில்) அவசியமாகத் தெரிந்திருக்க வேண்டிய தகவல்கள்

4 **ஓர் இலங்கைப் பிரசை**
என்கின்ற ரீதியில் தகவலறிவதற்கான உங்களின் உரிமை

5 **பணத்தினைப் பின்தொடர்தல்**
அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான ஏனைய தகவல் மூலங்கள்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், லோ அன்ட் சொசைட்டி டிரஸ்ட் மற்றும் டிரான்ஸ்பேரன்சி இண்டர்நேசனல் ஆகியவை முன்னர் உருவாக்கிய கருவித் தொகுதி இந்த வழிகாட்டிக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கியுள்ளது. நகர அபிவிருத்தி பற்றிய தகவல்கள் மற்றும் பிரதான திட்டங்கள் காணிக்கான மக்கள் கூட்டமைப்பிற்காக இரோமி பெரெரா (கொழும்பு ஏர்பன் கிளப்) அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ளன.

GCRF-UKRI - (Re)thinking the off-grid city 2019 வழங்கிய நிதியுதவியே இந்த வழிகாட்டியைச் சாத்தியமாக்கியுள்ளது.


# இலங்கையில் நகரக் காணியினைப் புரிந்துகொள்ளல்

1

## 1. அரச காணி மற்றும் தனியார் காணி என்றால் என்ன?

### 1) அரச காணி

அரச காணி என்பது அரசிற்குச் சட்டபூர்வமாக உரித்தாக இருக்கும் சகல காணிகளையும் குறிக்கும் அல்லது அரசினால் உரித்து மாற்றப்பட்டு வழங்கப்பட்டுள்ள காணியினையும் அதில் அமைந்துள்ள ஏதாவது கட்டிடத்தினையும் குறிக்கும் என்பதுடன் அதனுடன் இணைந்துள்ள சகல உரிமைகளையும் அக்கறைகளையும் சிறப்புரிமைகளையும் இது குறிக்கும். பல்வேறு கூட்டுத்தாபனங்களினதும் சபைகளினதும் காணிகளையும் இது உள்ளடக்குகின்றது. அரச காணிகள் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளினால் நிர்வகிக்கப்படுகின்றன.



### 2) தனியார் காணி

தனியார் காணி என்பது முற்றுமுழுவதும் தனிநபர்களுக்கு அல்லது தனிப்பட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமானதாகும் என்பதுடன் அவ்வாறான காணியின் உரித்தாண்மையானது பொதுவாகப் பல்வேறு வகையான உறுதிகளின் மூலம் மாற்றப்படுகின்றது.



## 2. காணியுடன் தொடர்புடைய முக்கியமான சொற்பதங்கள்

**வசித்துவருதல் (குடியிருத்தல்):** காணியில் வசித்தல் ˙அல்லது காணியினை உடைமையாகக் கொண்டிருத்தல்.

**இன்னொருவரின் சொத்துடன் சேர்தல்:** ஒரு நபரின் சொத்து இன்னொருவரின் சொத்துடன் இணைந்ததாக மாறுதல் அல்லது சேர்க்கப்பட்டதாக மாறுதல்.

**ஆட்சியுரிமை:** இன்னுமொரு நபரிற்குச் சொந்தமான காணியினை நபர் ஒருவர் கொடுப்பனவின்றி பத்து வருட காலத்திற்குத் தன் வசம் வைத்திருந்து, அவ்வாறு அந்தக் காணியினைத் தன் வசம் வைத்திருந்தமை குழப்பப்படாததாகவும் தலையீடற்றதாகவும் இருக்கையில், அவ்வாறு காணியினைத் தன் வசம் வைத்திருக்கும் நபர் அந்தக் காணிக்கான சட்டபூர்வமான உரித்தாண்மையினைக் கோரலாம்.

**விலைக்கு வாங்குதல்:** தனியார் காணிச் சொந்தக்காரர்களினால் காணிகள் விற்கப்படலாம் மேலும் அவர்களிடம் இருந்து அக்காணிகள் விலைக்கு வாங்கப்படலாம். சொத்தானது ஓர் உறுதி மூலமாக மாற்றப்பட்டு, சாட்சிகளும் ஒரு பிரசித்த நொத்தாரிசும் ஒருவர் முன் ஒருவர் பிரசன்னமாகியிருக்கையில் சாட்சிகளினால் ஒப்பமிடப்பட்டு பிரசித்த நொத்தாரிசினால் சான்றுப்படுத்தப்படுகையிலேயே காணி ஒன்றின் விற்பனையானது செல்லுபடியாகத்தக்கதாக அமையும். விற்பனை ஆவணங்கள் ˙உண்மையானவை என்றும் போலியற்றவை என்றும் சரியானவை என்றும் பிரசித்த நொத்தாரிசு கட்டாயமாக உறுதிப்படுத்த வேண்டும். ஏனையவற்றினை விட இந்த ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக, சம்பந்தப்பட்ட காணிப் பதிவகத்தில் இந்த ஆவணங்களைப் பதிவுசெய்ய முடியும். காணி ஒன்றின் விற்பனை மீது முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். முத்திரைத் தீர்வையின் தொகை காலத்திற்குக் காலம் மாறுவதுடன் தீர்வையானது காணியினை விலைக்கு வாங்குபவரினாலேயே செலுத்தப்பட வேண்டும்.

**பரம்பரை உடைமை மரணசாதனத்துடன் (உயிலுடன்):** நபர் ஒருவர் மரணசாதனம் ஒன்றினை எழுதிவைத்துவிட்டு இறக்கையில் அல்லது அவ்வாறு மரணசாதனத்தினை எழுதி வைக்காது இறந்தாலும் கூட, சொத்தின் மதிப்பு 4இ000இ000.'.- இனை விட அதிகமானதாக இருப்பின், மரபுரிமைப் பிரச்சினையானது மாவட்ட நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டும் எனச் சட்டம் தேவைப்படுத்துகின்றது.

**பரம்பரை உடைமை - மரணசாதனமின்றி:** ஆட்களின் பெயர்கள் மரணசாதனத்தில் பட்டியலிடப்பட்டிருப்பதாலும் அவர்களால் தனியார் காணிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நபர் ஒருவர் மரணசாதனமொன்றினை எழுதாமல் இறந்து விட்டால், சம்பந்தப்பட்ட காணி யாருக்குப் பரம்பரை உடைமையாகச் செல்லவேண்டும் என்ற விடயம் தொடர்பில் தீர்மானம் வகுப்பதற்குச் சட்டங்கள் உள்ளன. உதாரணமாக, மரணசாதனம் எழதாமல் இறந்த நபர் ஒருவருக்கு வாழ்க்கைத்துணையும் பிள்ளைகளும் இருந்தால், சொத்தில் அரைவாசிப் பங்கு வாழ்க்கைத்துணைக்குச் செல்லும் என்பதுடன் ஏனைய அரைவாசிப் பங்கு பிள்ளைகளுக்குச் செல்லும்.

**நன்கொடைகள்:** குறித்துரைக்கப்பட்ட சட்டங்களுக்கு அமைவாகக் காணிகள் நபர் ஒருவருக்கோ அல்லது நிறுவனமொன்றுக்கோ நன்கொடையாக வழங்கப்பட முடியும்.

## 3. அரச காணிகள்



அரச காணிகள் எவ்வாறு பிரசைகளுக்கு வழங்கப்படலாம் என்பது பற்றிய (அரச காணிகளை உடைமை மாற்றுதல்), வழங்கப்பட்ட காணிகள் மீது அரசும் பிரசைகளும் என்ன உரிமைகளைக் கொண்டுள்ளனர் என்பது பற்றிய, மற்றும் அரச காணிகளில் மக்கள் அத்துமீறுகையில் அரசு என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது பற்றிய சுருக்கமான விளக்கத்தினை இந்தப் பிரிவு வழங்குகின்றது. இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் அகல்விரிவானவையல்ல.

### 3.1 அரச காணிகளின் உரிமை எவ்வாறு மாற்றப்படுகின்றது?



அனுமதிப்பத்-திரங்கள் மூலம்



கொடைகளின் மூலம்



குத்தகை



ஜனாதிபதியினால்

### அனுமதிப்பத்திரம்

1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கக் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் (எல்டிஓ) உள்ளிட்ட பல சட்டங்களின் கீழ் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் காணியற்றவர்கள் போன்ற, சம்பந்தப்பட்ட சட்டங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நபர்களின் குறிப்பிட்ட வகையினருக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படலாம். சட்டத்தில் மற்றும் ∴ அல்லது அனுமதிப்பத்திரத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழமையாக வழங்கப்படுகின்றன.

பொதுவாக, அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள், வதிவிடம் மற்றும் ∴ அல்லது பயிர்ச்செய்கை நோக்கங்கள் உள்ளிட்ட அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகக் காணியினைப் பயன்படுத்த முடியும். அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் அரசிற்கு மாதாந்தம் சாதாரண மாதாந்த வாடகையினைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர். அனுமதிப்பத்திரங்கள் வருடாந்த அனுமதிப்பத்திரங்களாக விநியோகிக்கப்படலாம் அல்லது காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்படுகையில் அவை 'எல்டிஓ அனுமதிப்பத்திரங்கள்'எனவும் அறியப்படுகின்றன.

அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் எவரும் அனுமதிப்பத்திரத்தின் கீழ் வைத்திருக்கப்படும் எச்சொத்தினையும் உடைமை மாற்ற முடியாது என்றும் அவ்வாறான உடைமை மாற்றம் செல்லுபடியற்றதாகும் என்றும் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் குறிப்பிடுகின்றது. அனுமதிப்பத்திரத்தின் சொந்தக்காரர் ஆயுசு உரித்தாளி ஒருவரை (உரிமையாளர் மரணிக்கையில் சொத்திற்கு உரிமையாளராக மாறும் நபர்) மற்றும் ∴ அல்லது பின்னுரிமையாளரை (உரிமையாளர், அல்லது ஆயுசு உரித்தாளி மரணிக்கையில் பின்னுரிமையாளராக ஆகும் நபர் அல்லது ஆயுசு உரித்தாளி உரிமையாளரின் பின்னுரிமையாளராக மாறத் தவறுகையில்) பெயர் குறித்து நியமிக்கலாம்.

## கொடை

சுவர்ணபூமி, ஜயபூமி, ரனபூமி, ரன்பிம எனப்படும் உறுதிகளின் மூலம் அரசினால் காணிகளை நன்கொடைகளாக வழங்க முடியும். கொடையினை வைத்திருப்பவர்களே காணிக்கான முழு உரிமைச் சொந்தக்காரர்களாக இருப்பர். அதாவது, கொடையினை வைத்திருப்பவரே காணியின் உரிமையாளராவார்.

அனுமதிப்பத்திரங்கள் வைத்திருப்பவர்கள் சில குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்கையில், அவர்களின் அனுமதிப்பத்திரங்களை ஒரு கொடையாக மாற்றிக்கொள்ள முடியும்.

காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழும் கொடைகள் வழங்கப்படலாம். கட்டளைச்சட்டத்தின் அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அரசாங்க அதிபரினால் விதிக்கப்படும் ஏதாவது விசேட நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இக்கொடைகள் வழங்கப்படலாம். இந்த நிபந்தனைகள், உரிமையாளரின் வதிவிட நிபந்தனை உள்ளடங்கலாக, தனிப்பட்ட கொடைக்கு அல்லது சம்பவங்களின் வகுப்பு∴வகைக்குப் பிரயோகிக்கத்தக்கதாக இருக்கும். இவ்வாறான நிபந்தனைகள் காணியுடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அசலான கொடை பெறுனரை மாத்திரமன்றி, சொத்திற்கான எதிர்கால உரித்தினை வைத்திருப்பவர்களையும் பிணைப்பவையாக இருக்கும்.

## குத்தகை

மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் வதிவிட நோக்கங்களுக்காகவும் விவசாய நோக்கங்களுக்காகவும் அல்லது வர்த்தக நோக்கங்களுக்காகவும் 30 வருட காலப்பகுதிக்காக, 1947 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க அரச காணிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் குத்தகை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட முடியும். விசேட கருத்திட்டங்களுக்காகக் குத்தகைக் காலப்பகுதியினை 50 வருடங்கள் வரையில் நீட்டிக்க முடியும். ஆரம்பக் குத்தகையின் வெற்றிகரமான பூர்த்தியினைத் தொடர்ந்து, குத்தகைக்

காலப்பகுதியினை நீட்டிக்க முடியும். காணி ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடன் இந்த அனுமதிப்பத்திரங்களை மாற்ற முடியும் மேலும் அடகு வைக்க முடியும்.

### ஜனாதிபதியினால்

அறக்கொடை நோக்கங்களுக்காக, சமய நோக்கங்களுக்காக, அறிவியல் நோக்கங்களுக்காக, அல்லது வேறு ஏதாவது நோக்கங்களுக்காக அரச காணிகளை ஜனாதிபதியினால் கொடையாக வழங்க முடியும் அல்லது சாதாரண விலையில் குத்தகைக்கு விட முடியும் அல்லது வாடகைக்கு விட முடியும்.

## தேசிய வீடமைப்பு அதிகாரசபை (என்எச்டீஏ)

வீடமைப்பு அபிவிருத்திக்காகத் தனிநபர்களுக்குக் காணிகளைக் கிடைக்கச் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தேசிய வீடமைப்பு அதிகாரசபை கொண்டுள்ளது. தேசிய வீடமைப்பு அதிகாரசபை வழங்கிய வீடுகளில் வாழும் நபர்களைப் பொறுத்த அளவில், காணியின் உரித்தாண்மையானது தொடர்ந்தும் தேசிய வீடமைப்பு அதிகாரசபையிடமே காணப்படும் என்பதுடன் வீட்டில் வசிப்பவர், அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வீட்டின் மீதான உடைமைசார் உரிமைகளைக் கொண்டிருப்பார்.

## நகர அபிவிருத்தி அதிகாரசபை (யுடிஏ)

நகர அபிவிருத்தி அதிகாரசபை அண்மைக் காலங்களில் அரச காணிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புக்களை நிர்மாணித்து அபிவிருத்தி நடவடிக்கைகளினால் வெளியேற்றப்பட்ட அல்லது வேறு இடங்களுக்கு மாற்றப்பட்ட குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புக்களை விநியோகிப்பதில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறான வீடமைப்புக்களைப் பெற்றுக்காண்ட நபர்கள், அடுக்குமாடிக் குடியிருப்பின் உரித்தாண்மையின் தன்மையினை மதிப்பிடுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் கைச்சாத்திட்ட ஆவணங்களைப் பரிசீலிக்க வேண்டும். உடன்படிக்கை எதுவும் இல்லையெனின், தெளிவுபடுத்தலைக் கோருவதும், பரஸ்பரம் இணங்கப்பட்ட மற்றும் புரிந்துகொள்ளப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையிலும் உரித்தின் வடிவின் அடிப்படையிலும் ஆவணம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதும் முக்கியமானதாகும்.

## 3.2 அரச காணி எவ்வாறு சட்டத்தினால் பாதுகாக்கப்படுகின்றது?

- அரச காணிகளுக்கு எதிராக யாருக்கும் ஆட்சியுரிமையினைக் கோர முடியாது. இதன் அர்த்தமாவது, அரச காணியொன்றில் நபர் ஒருவர் பல வருடங்களாக அல்லது தலைமுறை தலைமுறைகளாகக் கூட வாழ்ந்து வந்தாலும், அவ்வாறு வாழ்ந்து வரும் ஒரே காரணத்திற்காக அந்த அரச காணிக்கு அவரால் எவ்விதமான உரிமையினையும் கோர முடியாது.

- அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களால் அவர்களின் காணிகளை விற்பனை செய்ய முடியாது. அவர்களால் அக்காணிகளைச் சட்டத்திற்கு அமைவாக மாற்றுவதற்கு மாத்திரமே முடியும். அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் அல்லது கொடை வைத்திருப்பவர்கள் அவர்களின் காணிகளைப் பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அங்கீகாரம் இன்றி மாற்ற முடியாது. பிரதேச செயலளாரின் அங்கீகாரத்துடன் மாற்றும் போது கூட, அனுமதிப்பத்திரம் யாருக்கு வழங்கப்பட்டதோ அல்லது கொடை யாருக்கு வழங்கப்பட்டதோ அவர் மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்ந்தும் பிரயோகிக்கத்தக்கவையாக இருக்கும்.

- அனுமதிப்பத்திரத்தினை அல்லது கொடையினைப் பொறுத்த அளவில், பெயர் குறித்த நியனம் இல்லையெனில் (பின்னுரிமையாளர் அல்லது ஆயுசு உரிமையாளர்), எந்தச் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதோ அச்சட்டத்திற்கு அமைவாகக் கொடை முறைப்படி உரிமையாக்கப்படும்.

## 3.3 எழுத்திலான தெளிவான அதிகாரமளிப்பில்லாது அரச காணியில் குடியிருப்பதனால் ஏற்படும் விளைவுகள்

### அந்தஸ்து/சட்ட உரிமைகள்

நீங்கள் அரச காணியில் குடியிருந்து, அவ்வாறு நீங்கள் குடியிருப்பதை அங்கீகரிக்கும் வெளிப்படையான எழுத்திலான அதிகாரமளிப்பு உங்களிடம் இல்லாதிருந்தால், நீங்கள் அரச காணியில் 'அதிகாரமின்றிக் குடியிருப்பவராகக்' கருதப்படலாம். அவ்வாறான காணியில் இருந்து அல்லது கட்டிடத்தில் இருந்து நீதிமன்ற உத்தரவொன்றின் மூலம் உங்களை அகற்றுவதற்கான அதிகாரம் அரசுக்கு உள்ளது.

## குடியிருப்பவர்களை வெளியேற்றுவதற்கான/அகற்றுவதற்கான நடைமுறை

அரச காணிகளை அதிகாரமின்றித் தம்வசம் வைத்திருப்பவர்களிடம் இருந்து அல்லது அரச காணிகளில் அதிகாரமின்றிக் குடியிருப்பவர்களிடம் இருந்து அரச காணிகளை மீட்பதற்கு அரச காணிச் (உடைமை மீட்பு) சட்டம் ஏற்பாடுகளை வழங்குகின்றது.


அரச காணியில் குடியிருப்பவரிடம் அவ்விடத்தினை விட்டு வெளியேறுமாறு கேட்கும் வெளியேற்ற அறிவித்தலை அரச அதிகாரம் குடியிருக்கும் நபருக்கு வழங்க வேண்டும். அவ்வாறான காணி உண்மையிலேயே அரச காணி என்பதாக அதிகாரம் கொண்டுள்ள அபிப்பிராயத்தினையே வெளியேற்ற அறிவித்தல் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதுடன் அவ்வறிவித்தலுக்கு எதிராக அதிகாரத்திடம் எவ்விதமான ஆட்சேபனையோ அல்லது பிரதிநிதித்துவமோ மேற்கொள்ளப்பட முடியாது. வெளியேற்ற அறிவித்தலைப் பெறும் நபர் ஒருவர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று குறிப்பிட்ட வளவில் இருந்து வெளியேற வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றார் என்றாலும் ஆகக் குறைந்தது 30 நாட்களினுள் வெளியேறுவதற்கான அவகாசம் அவருக்கு வழங்கப்படுகின்றது.

நபர் ஒருவர் வெளியேற்ற அறிவித்தலுக்கு இயைபுறத் தவறுமிடத்து, நீதவான் நீதிமன்றத்தில் இருந்து வெளியகற்றற் கட்டளையினைப் பெறுவதற்கு அரச முகவரினால் விண்ணப்பிக்க முடியும். இந்தக் கட்டத்தில், குறிப்பிட்ட காணியில் இருந்து தான் ஏன் வெளியகற்றப்படக் கூடாது என்பதற்கான காரணங்களைக் காட்டுவதற்குக் குடியிருப்பவருக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது. காணிக்கான உடைமைக்கு நீங்கள் உரித்தினைக் கொண்டுள்ளீர்கள் அல்லது அக்காணி ஒரு தனியார் காணி என்பனவே நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் செல்லுபடியாகத்தக்க ஒரே காரணமாக இருக்கும். அரசிடம் எதையும் நிரூபிக்குமாறு நீதிமன்றம் கேட்காது.

ஆட்சேபனைகள் செல்லுபடியாகத்தக்கவை அல்ல என நீதிமன்றம் தீர்ப்பளித்தால், வெளியகற்றலுக்கான கட்டளையினை நீதிமன்றம் வழங்கலாம் என்பதுடன் குடியிருப்பவரைப் பௌதிக ரீதியாக அகற்றுவதற்கு பிஸ்காலுக்கு அல்லது பொலிசுக்குக் கட்டளையிடப்படலாம்.

## 4.தனியார் காணி

### 4.1 தனியார் காணியினைச் சொந்தமாகக் கொண்டிருத்தல்



விலைக்கு வாங்குதல், நன்கொடை, மரபுரிமை மற்றும் ஆட்சியுரிமை உள்ளிட்ட பல வழிகளில் நபர் ஒருவர் தனியார் காணிக்கான உரித்தாண்மையினைப் பெற்றுக்கொள்ள முடியும். காணி பெறப்படும் பல்வேறு முறைகளுடன் தொடர்புடையதான வெவ்வேறு ஆவணங்கள் உள்ளன.

உரித்தாண்மை முறை அல்லது ஆவணங்கள் என்பன எவ்வாறானவையாக இருப்பினும், சகல காணிகள் பற்றிய விபரங்களும் உள்ளூர்க் காணிப் பதிவகத்தில் பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ளன. இதற்கான காரணம், குறிப்பிட்ட சட்டத்தின் கீழ், காணி தொடர்பான சகல ஆவணங்களும் கட்டாயம் பதிவுசெய்யப்படல் வேண்டும் என்பதாகும்.

உரித்தாண்மையின் தன்மை பற்றி நீங்கள் அறியாதிருந்தால், அல்லது நீங்கள் வசிக்கும் காணிக்கு நீங்கள் எவ்வாறு குடிவந்தீர்கள் என்பதை நீங்கள் அறியாதிருந்தால், காணிப் பதிவகத்தில் உரித்துத் தேடலை மேற்கொள்வதற்கு நீங்கள் சட்டத்தரணி ஒருவரின் உதவியை நாடலாம்.

### 4.2 ஓர் ஷஉறுதி’ என்பது என்ன?

இது தனியார் காணிக்கு உரித்தினை வழங்குகின்ற ஒரு சட்ட ஆவணமாகும். செல்லுபடியாகத்தக்க உறுதி ஒன்று ஒரு பிரசித்த நொத்தாரிசினால் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த வழிகாட்டியில் பின்னர் கலந்துரையாடப்படும் உரித்துப் பதிவுடன் இது இணங்கிச் செல்கின்றது.

### 4.3 ஒரு நொத்தாரிசினால் உறுதி ஒன்று எப்போது நிறைவேற்றப்படுகின்றது?

பின்வருமாறு உறுதி ஒன்று நிறைவேற்றப்படுகின்றது:

- தன் முன்னாலுள்ள ஆவணம் உண்மையானது, சரியானது மற்றும் போலியல்லாதது என்பது ஒரு பிரசித்த நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.
- ஒருவர் மற்றவர் முன்னிலையில் பிரசன்னமாகியிருக்கையில் நொத்தாரிசினாலும் நிறைவேற்றுனராலும் சாட்சிகளினாலும் ஒப்பமிடப்படுகின்றது.
- உறுதி ஒன்றுக்கு ஏனைய உறுதிகளை விட முன்னுரிமை வழங்குவதற்காக அதனைச் சம்பந்தப்பட்ட காணிப் பதிவகத்தில் பதிவுசெய்ய முடியும்.

### 4.4 உறுதிகளின் வகைகள்

உங்களுக்குச் சொந்தமான உறுதியின் வகையினை அடையாளம் காணுங்கள். உங்கள் சொத்தின் உரித்தாண்மையானது, உறுதிகள் மூலமாகவும் மரணசாதனத்தின் மூலமாகவும் (உயில்) விருப்பாவணப் பின்னிணைப்பு மூலமாகவும் மாற்றப்படுகின்றது. பின்வரும் வகைகளிலான உறுதிகளின் மூலம் உரித்து மாற்றம் மேற்கொள்ளப்படலாம்.

### அறுதியுறுதி

விற்பவரும் (மாற்றுபவர்) வாங்குபவரும் (மாற்றத்தினைப் பெறுபவர்) விற்பவருக்கு உரித்து மாற்றப்பட்ட முன்னைய உறுதி பற்றி எடுத்துரைத்தல் மற்றும் சொத்தினைக் கைம்மாறுதல் (விற்பனை விலை). மாற்றுபவர் உறுதியில் கைச்சாத்திட வேண்டும் என்பதுடன் இரண்டு சாட்சிகள் அவர்களின் கையொப்பத்தினை இட்ட பின்னர் அது நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.

அறுதியுறுதி என்பது ஒரு நபருக்குச் சொந்தமான சொத்தொன்று இன்னுமொரு நபருக்கு விற்கப்படுகையில் ∴ மாற்றப்படுகையில் தயாரிக்கப்படும் உறுதியாகும். உறுதியானது பெயர்களையும் முகவரிகளையும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

### நன்கொடை உறுதி

நன்கொடை உறுதியானது எவ்விதமான பணக் கைம்மாறல்களும் இன்றி ஒரு நபரிடம் இருந்து (கொடையாளர்) சொத்தினை மற்றொரு நபருக்கு (கொடை பெறுனர்) மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

### பிரகடன உறுதி

எந்தவொரு சொத்திற்கும் யாராவது நபர் ஒருவர் கோரிக்கை ஒன்றை விடுக்க விரும்பினால் அல்லது உரிமை ஒன்றைப் பிரகடனப்படுத்த விரும்பினால், அவ்வாறான உரிமைக்கான அல்லது கோரிக்கைக்கான சட்ட அடிப்படையினை உருவாக்குவதற்காக ஒரு பிரகடன உறுதி நிறைவேற்றப்படலாம்.

எந்தவொரு நபரும், பத்து வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்கு, வேறு எவரினதும் உரிமைக்கு எதிராக, சொத்தொன்றின் தடையற்றதும் தலையீடற்றதுமான உடைமையினைக் கொண்டிருக்கையில், அவ்வாறான நபர் பிரகடனப்படுத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றி, சொத்திற்கான ஆட்சியுரிமை உரித்தினைத் தான் பெற்றுள்ளதாகப் பிரகடனப்படுத்தலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில், பிரகடனப்படுத்தியவரினால் உடைமையாக வைத்திருக்கப்படுவது பற்றி நொத்தாரிசினால் நடைமுறையில் உறுதிப்படுத்த முடியாது என்பதனால், ஒரு முன்னெச்சரிக்கை ஏற்பாடாக, பிரகடனப்படுத்துபவரிடம் இருந்து உடைமையின் காலப்பகுதி தொடர்பான விடயங்களைக் குறிப்பிடும் சத்தியக்கடதாசியினைப் பெறுவது சாதுர்யமானதாகும்.

யாராகிலும் நபர் ஒருவர் எவ்விதமான மரணசாசனத்தினை அவரின் ஆயுட் காலத்தின் போது நிறைவேற்றாமல் மரணித்தால், பயனாளிகள் அவர்களின் உரிமைகளைப் பிரகடனப்படுத்துவதற்காக பிரகடன உறுதியொன்றினை நிறைவேற்ற முடியும். பயனாளிகளின் உரிமைகளைப் பிரகடனப்படுத்துவதற்காக பிரகடன உறுதியொன்று நிறைவேற்றப்பட முடியும்.

அவ்வாறான உறுதிகளில், முன்னைய பதிவுகள் பற்றிய விபரங்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பின், அவற்றினைச் சம்பந்தப்பட்ட வால்யூமிலும் பக்கங்களிலும் பதிவுசெய்ய முடியும். ஆட்சியுரிமை உரித்துக்கான பிரகடன உறுதியில் - முன்னைய பதிவு பற்றிய விபரங்கள் கிடைக்காவிட்டால் - அது புதிய பக்கத்தில் பதியப்பட வேண்டும்.

## மரணசாதனம் (இறுதி விருப்பாவணம்)

மரணசாதனம் என்பது நபர் ஒருவர் அவரின் ஆயுட்காலத்தின் போது தேடிய சொத்துக்கள் அவரின் இறப்பின் பின்னர் எவ்வாறு உரிமை மாற்றப்பட வேண்டும் எனப் பிரகடனப்படுத்தும் ஆவணமாகும். மரணசாதனத்தினை எழுதி வைத்துவிட்டு நபர் ஒருவர் இறக்கையில், பின்னுரிமை தொடர்பான சகல சட்டங்களையும் விட மரணசாதனமே முன்னுரிமை பெறுகின்றது.

## விருப்பாவணப் பிண்ணினைப்பு

விருப்பாவணப் பின்னிணைப்பு என்பது மரணசாதனத்திற்கான பின்னிணைப்பு ஆகும் என்பதுடன் இது மரணசாதனத்தினை எழுதியவரினால் மரணசாதனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கு மேலும் எதையாவது சேர்க்கின்றது அல்லது உள்ளடக்கத்தினை மாற்றுகின்றது.

## 4.5 உரித்தினைப் பதிவுசெய்தல் என்றால் என்ன?

உரித்தினைப் பதிவுசெய்தல் சட்டத்தின் கீழ் காணிக்கான உரித்துக்களை இப்போது பதிவுசெய்ய முடியும். 1998 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறைமையானது கம்பஹா, நீர்கொழும்பு, இரத்தினபுரி, கம்பளை, அநுராதபுரம், ஹோமாகம, குருணாகல், கண்டி, அம்பாந்தோட்டை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற சில பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும். உரித்தினைப் பதிவுசெய்தல் உரித்தின் தெளிவான முறைமையினை உறுதிப்படுத்துவதுடன் இது உறுதிகளை விட மலிவானதாகும்.

## 4.6 தனியார் காணிகளை அரசு எவ்வாறு பெற்றுக்கொள்கின்றது?

காணிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் பொது நோக்கங்களுக்காக, சட்டத்திற்கு அமைவாகத் தனியார் காணிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் (காணி கொள்ளல் சட்டம், நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்).

மேலும், பிரதேச சபைகளும் நகர சபைகளும் மாநகர சபைகளும் தனியார் காணிகளைக் கொள்வதற்கான அதிகாரங்களைக் கொண்டுள்ளன. பொது நோக்கங்களுக்காகத் தேவைப்படும் எந்தச் சொத்திற்குமான உரிய நட்டஈட்டினை அச்சொத்தின் உரிமையாளருக்கு அல்லது அச்சொத்தில் வசிப்பவருக்கு வழங்குவதன் மூலம் அல்லது அவ்வாறு தனியார் சொத்தினை எடுப்பதனால் சட்ட உரிமைகள் பாதிக்கப்படும் நபருக்கு நட்டஈட்டினை வழங்குவதன் மூலம், காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வதனைப் பிரதேச சபைகள் சட்டமும் நகர சபைகள் சட்டமும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டமும் வலுவூட்டுகின்றன.

காணிகளைக் கொள்கையில் அரசாங்கம் கட்டாயம் இயைபுறவேண்டிய சில பொதுவான அம்சங்களாவன:

- கொள்வதற்கான நோக்கத்தினை அறிவித்தல்
- ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு இடமளித்து அவை தொடர்பில் தீர்மானித்தல்
- யாரின் காணிகள் கொள்ளப்படுகின்றனவோ அவர்களுக்கு நட்டஈட்டினை வழங்கல்
- மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்பதால், பொதுமக்களுக்கு அரசு நியாயமான கால அவகாசத்தினைக் கட்டாயம் வழங்க வேண்டும் என எதிர்பார்க்க முடியும்.

காணியைக் கொள்கையில் அரசு கட்டாயம் பின்பற்ற வேண்டியதும் 3 வெவ்வேறான சட்டங்களின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளதுமான நடைமுறைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

## காணி கொள்ளல் சட்டம்

பொது நோக்கமொன்றுக்காக ஒரு குறிப்பிட்ட காணி பொருத்தமானது ∴ தேவைப்படுகின்றது என அமைச்சர் கருதுகையில், அக்காணியின் உரிமையாளருக்கு அல்லது உரிமையாளர்களுக்கு அறிவித்தல் ஒன்று வழங்கப்படுவதற்கான ஏற்பாட்டினை அவர் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அறிவித்தலானது அக்காணியில் அல்லது அக்காணிக்கு அருகாமையில் வெளிப்படையான இடங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அறிவித்தல்

ய) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அமைந்திருக்க வேண்டும்.

டி) கொள்வதற்குக் கருதப்படும் காணி பற்றிய விபரிப்பினைக் கொண்டிருக்க வேண்டும்.

உ) அந்தக் காணியினை அரசாங்கம் பொது நோக்கமொன்றுக்காகக் கொள்வதற்கு எண்ணியுள்ளது என்பதுவும், கருதப்படும் கொள்ளலுக்கு எதிரான எழுத்திலான ஆட்சேபனைகள் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக அவ்வாறான அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுவும் குறிப்பிடப்படும்.

ன) அவ்வாறான ஆட்சேபனைகள் எக்காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அக்காலப்பகுதி குறித்துரைக்கப்பட வேண்டுமென்பதுடன் அக்காலப்பகுதியானது, அவ்வாறான அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியில் இருந்து பதினான்கு நாட்களுக்குக் குறையாததாக இருக்க வேண்டும்.

ஆட்சேபனைகளைப் பரிசீலித்த பின்னர், குறிப்பிட்ட காணி கட்டாயம் கொள்ளப்பட வேண்டும் என்பதாகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தெரிவடிப்படையின் பிரகாரம் தன்னால் ஒரு பிரகடனத்தினை விடுக்க முடியும் என அமைச்சர் திருப்தியுற்றால், பிரகடனம் வர்த்தமானியில் வெளியிடப்படும். அதன் பின்னர் காணியானது நில அளவைத் திணைக்களத்தினால் அளக்கப்படும். 500∴- ரூபா பெறுமதியினை விட அதிக பெறுமதியுடையதாகக் காணி பெறுமதி கணிக்கப்படுமிடத்து, அறிவித்தலானது செய்திப்பத்திரிகையில் வெளியிடப்பட்டு காணியிலும் காட்சிப்படுத்தப்படும். காணி மீது கோரிக்கை வைப்பவர்கள் நட்டஈட்டினை மதிப்பிடுவதற்காகக் காணி கொள்ளும் அதிகாரியின் முன் ஆஜராக வேண்டும்.

**காணிச் சட்டத்திற்கான தேவைக் கோரிக்கை**

இச்சட்டத்தின் கீழ் அமைச்சரினால் தகைமைவாய்ந்த அதிகாரமுடையவராக நியமிக்கப்படும் எந்த அரச அதிகாரியும், சனாதிபதியின் முன்னங்கீகாரத்துடன், தேவைப்படும் காணியினை உடைமையாக்கி, உடைமையாக்குவதைத் துரிதப்படுத்துவதற்கு அவசியமான எழுத்திலான பணிப்புரைகளை வழங்குவார்:

ய) சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விநியோகங்கள் மற்றும் சேவைகளைப் பேணும் நோக்கத்திற்காக

டி) அத்தியாவசியமான பண்டங்களை இறக்குமதி செய்து, களஞ்சியப்படுத்தி, விநியோகிக்கும், சனாதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட எத்திட்டத்தினையும் அமுல்படுத்தும் நோக்கத்திற்காக.

உ)ஆயுதப் படைகளின் அல்லது விஜயம் செய்யும் படைகளின் பயன்பாட்டிற்கான அல்லது குடியிருத்தலுக்கான நோக்கத்திற்காக.

**நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

மக்களின் பொது நலனோம்புகைக்கான நியாயமான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தினை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவசரமாகத் தேவைப்படும் எப்பிரதேசத்திலுமுள்ள எக்காணியினையும் சனாதிபதி பிரகடனப்படுத்த முடியும். நகர அபிவிருத்திக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரையினை அடிப்படையாகக் கொண்டு இப்பிரகடனம் மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.6 தனியார் காணிகளை அரசு எடுத்தால் நட்டஈடு வழங்கப்படுகின்றதா?

ஆம்.

காணியை எடுக்கும் அதிகாரி, விசாரணை ஒன்றினைத் தொடர்ந்து நட்டஈட்டினை மதிப்பிட வேண்டும். காணியின் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு மதிப்பிடப்படுகின்றது. காணி கொள்ளும் அதிகாரியின் தீர்மானம் தொடர்பில் கோரிக்கையாளர் திருப்தியடையாவிட்டால், நட்டஈடு வழங்குவதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டு 21 நாட்களினுள் மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படலாம். மேலதிக மேன்முறையீட்டினை மாவட்ட நீதிமன்றத்திற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் சமர்ப்பிக்க முடியும்.

# முதன்மைத் திட்டங்களைப் புரிந்துகொள்ளுதல்

# 2

முதன்மைத் திட்டங்களும் அபிவிருத்திக் கொள்கைகளும் வெவ்வேறு நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட முடியும் - அவை ஒரு நாட்டிற்கானதாக, ஒரு மாகாணத்திற்கானதாக அல்லது ஒரு சிறிய நகரத்திற்கு அல்லது நகர் சார்ந்த பிரதேசத்திற்கானதாக இருக்கலாம். சில ஆவணங்கள் மிகவும் தொழில்நுட்ப உள்ளடக்கங்களைக் கொண்டதாக இருக்கலாம் அல்லது அதிகமான தகவல்களைக் கொண்டதாக இருக்கலாம். இவை நீங்கள் அவற்றினைப் புரிந்துகொள்வதற்கு நகரத் திட்டமிடல் அல்லது கட்டிடக்கலையில் நிபுணராக இருக்கவேண்டும் எனும் ஒரு தோற்றப்பாட்டினைக் கொடுக்கலாம். எவ்வாறாயினும் ஒரு பிரதேசத்தினை நன்கு அறிந்தவர்கள் அந்த பிரதேசத்தில் வாழும் பிரஜைகளே. எனவே, முதன்மைத் திட்டத்தினைக் கூறுகளாகப் பிரிப்பதன் மூலமாக ஆவணங்கள் என்ன கூறுகின்றன என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

## 1. முதன்மைத் திட்டங்கள் யாருக்கானவை?

இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதன் மூலமாக ஒட்டுமொத்தச் செயன்முறையிலும் கட்டாயம் சம்பந்தப்பட வேண்டிய பிரதான தொகுதி மக்களை நாங்கள் அடையாளம் காண முடியும். சில திட்டங்கள் முழு நகரத்தினையும் இலக்கு வைக்கலாம். ஒரு குறிப்பிட்ட தொழிற்துறையினை இலக்கு வைக்கலாம். (விவசாயம் அல்லது கடற்றொழில்) அல்லது வீதி வியாபாரிகள் போன்ற சில குறிப்பிட்ட குழுக்களை இலக்கு வைக்கலாம். இந்த குறிக்கோள்கள் ஆவணத்தின் ஆரம்பத்திலேயே விபரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் முதன்மைத் திட்டச் செயன்முறையில் நேரிலே பாதிக்கப்பட்ட நபர்களையும் சமுதாயங்களையும் ஈடுபடுத்துவதற்காக அவர்களைத் திரட்டுவதற்கு இதுவே எமது ஆரம்பப் புள்ளியாக இருக்க வேண்டும். இதுவும் மிகவும் முக்கியமானது, எனெனில் ஒரு குறிப்பிட்ட பொது நோக்கத்திற்காக அரசினால் காணி ஒன்று எடுக்கப்படுகையில் உண்மையிலேயே அந்தக் கருத்திட்டம் பொதுநோக்கம் உடையதா அல்லது இல்லையா என்பதைப் பற்றிய பதிலை வழங்கக்கூடிய சிறந்த நபர்களாக இந்தக் குழுவினர்களே காணப்படுகின்றனர்.

## 2. யார் முதன்மைத் திட்டத்திற்கு நிதி வழங்குகின்றனர்?

இந்த முக்கியமான தகவலானது ஆரம்பத்தில் எம்மால் அணுக முடியாதிருக்கும் அதிகமான தகவல்களுக்கு எம்மை இட்டுச் செல்லலாம். அரச நிதியிடலைக் கொண்டுள்ள அல்லது அரச அமுல்படுத்தலைக் கொண்டுள்ள எந்தக் கருத்திட்டமும் பிரஜைகள் என்கின்ற ரீதியில் எம்மைத் தகவலறியும் உரிமைக்கு இயலுமாக்கி பொதுமக்களின் பணத்தினைப் பயன்படுத்தும்

அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய அதிகமான தகவல்களை நாடச் செய்கின்றது. (இலங்கையில் தகவலறியும் உரிமையினை பயன்படுத்துவது பற்றி பகுதி ஓ இனைப் பார்க்கவும்.)

பல்தரப்பு வங்கிகளினால் நிதியிடப்படும் அபிவிருத்தித் திட்டமொன்று மேற்கொள்ளப்படுகையில் அமுல்படுத்தும் முகவர்கள் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற, சட்ட ரீதியாகக் கடப்படுத்துகின்ற சில குறிப்பிட்ட செயன்முறைகள் காணப்படுகின்றன (நகர அபிவிருத்தி அதிகாரசபை அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்றவை). உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி போன்ற வங்கிகள் பாதுகாப்புக் கொள்கைகளையும் குறைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகளையும் தகவல் வெளிக்கூருகைக் கொள்கைகளையும் கொண்டுள்ளதுடன் இவை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியவையாகும். இந்தக் கருத்திட்ட ஆவணங்களை அவற்றின் இணையத்தளங்களில் பார்க்க முடியுமென்பதுடன் இவை நீங்கள் மேலும் அறிய விரும்புகின்ற கருத்திட்டம் பற்றிய மேலதிக தகவல்களையும் வழங்குகின்றன. (மேலதிக தகவல்களுக்கு பகுதி ஓ இனைப் பார்க்கவும்.) பாதுகாப்புக் கொள்கைகள் சட்ட ரீதியாகக் கடப்படுத்துபவையாக இருப்பதுடன் அபிவிருத்திக் கருத்திட்டங்களில் இருந்து மக்களையும் சூழலையும் பாதுகாப்பதற்காகவே அவை அமுலில் உள்ளன. அபிவிருத்திக் கருத்திட்டங்களால் தங்களது உரிமைகள் மீறப்படும் அல்லது தங்களது உரிமை மீறப்பட்டுள்ளது, மேலும் அபிவிருத்திக் கருத்திட்டம் மோசமான விளைவினை ஏற்படுத்தும் அல்லது மோசமான விளைவினை ஏற்படுத்துகின்றது என நினைத்தால் அது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்வதற்கு பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு அல்லது சிவில் சமூகங்களுக்குக் குறைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகள் அனுமதியளிக்கின்றன. பரிகாரங்களைத் தேடுவதற்கு நீங்கள் இலங்கைச் சட்டத்தினையும் பயன்படுத்த முடியும்.



## 3. யார் கலந்தாலோசிக்கப்படுகின்றனர்?

சில அபிவிருத்தித் திட்டங்கள் அவற்றின் வடிவமைப்புச் செயன்முறையின் போது கலந்தாலோசிக்கப்பட்ட தொழில்முறையானவர்களையும் குழுக்களையும் கொண்டுள்ளன. இந்தத் தனிநபர்கள் அல்லது குழுக்கள் கருத்திட்டம் தொடர்பான அதிக தவல்களைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் இவர்களுடன் கலந்துரையாடலினை நடத்துவது பயன்மிக்கதாக இருக்கும். நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் போன்ற அரச இணையத்தளங்களும் மேலும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் இணையத்தளங்களும் பொதுமக்களின் கருத்துக்களுக்காக அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பற்றி அறியத் தருகின்றன. இந்த ஆவணங்கள் மூன்று மொழிகளிலும் கிடைக்கச் செய்யப்பட வேண்டும் என்பதுடன் உங்களுக்கு விருப்பமான மொழியில் பிரதியொன்றினை வேண்டுவதற்கான உரிமையினை நீங்கள் கொண்டுள்ளீர்கள். முக்கியமான குழுக்கள் அல்லது நேரடியாகப் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் வடிவமைப்புக் கட்டங்களின் போது அல்லது அமுல்படுத்தல் கட்டங்களின் போது கலந்தாலோசிக்கப்படவில்லை என நீங்கள் நினைத்தால் அந்தக் குரல்களை உள்ளடக்குவதற்காக நீங்கள் ஆதரித்து வாதாட முடியும்.



## 4. அனைத்தையும் பற்றிக் கேள்வி கேளுங்கள்.

முதன்மைத் திட்டத்தில் இருக்கின்ற ஒரே காரணத்திற்காக அந்த விடயத்தில் அடங்கியுள்ள தகவல்கள் துல்லியமானவை என அர்த்தம் கொள்ள முடியாது. தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது போல் காட்சியளிக்கும் வகையில் தகவல்களைச் சமர்ப்பிக்க முடியும். ஆனால் தகவல்களை வழங்குவதற்கு வேறு வரைவிலக்கணங்கள் அல்லது பார்வைக் கோணங்கள் பயன்படுத்தப்படலாம். எப்பொழுதுமே தரவுகளின் மூலத்தினையும் சொற்பதங்களின் வரைவிலக்கணங்களையும் பரிசீலிக்கவும். தரவுகள் யாரைப் பற்றிக் கூறுகின்றனவோ அந்த மக்களை அல்லது இடங்களைச் சென்று பார்ப்பதைக் கூட இது தேவைப்படுத்தலாம்.

உதாரணமாக, கொழும்பு நகரத்திற்கான 2012 ஆம் ஆண்டின் அபிவிருத்தித் திட்டங்கள் குறைந்த வருமானம் பெறும் குடியேற்றங்களை 'நன்மைகள் கிட்டாதவர்களாக', ' சட்டவிரோதமாக வசிப்பவர் களாக', அல்லது 'சேரியில்

வசிப்பவர்களாக' குறிப்பிடுகின்றது. இவ்வாறான குடியிருப்புகளில் வாழ்கின்ற வீடுகளின் எண்ணிக்கை மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பாக நகர அபிவிருந்தி அதிகாரசபை கூட அபிவிருத்தித் திட்டத்தில் தரவுகளை வழங்கியுள்ளதுடன் அவர்களை அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட அடுக்குமாடிக் கட்டிடங்களுக்கு நகர்த்துவதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் சமுதாயங்களுக்குச் சிறந்த வீடமைப்பு நிலைமைகள் வழங்கப்பட்டு நகரமும் அபிவிருத்தி செய்யப்படுவதே குறிக்கோள் என ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இது துல்லியமற்ற தகவலாகும். ஏனேனில் குறைந்த வருமானம் பெறும் சமுதாயங்கள் கொழும்பிலே நிரந்தரமாகத் தரமுயர்த்தப்பட்ட வீடமைப்புகளில் வாழ்ந்து வருவதுடன் அவை நன்மைகள் கிட்டாத அல்லது சேரிகள் என வகைப்படுத்தப்படும் வீடமைப்புக்களைக் கொண்டிருக்கவில்லை என கொழும்பு மாநகரசபையும் சிவில் சமூகங்களும் குறிப்பிடுகின்றன. எனவே, கொழும்பில் நகர மீளுருவாக்கத்திற்கு எதிரான ஆதரித்து வாதாடலானது, அரசினால் தவறாக முத்திரை குத்தப்பட்டு இந்தச் சமுதாயங்களின் உடைமைகள் நியாயமற்ற முறையில் அகற்றப்படுவதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## 5. வரைபடத்தில் திட்டம் எங்கே உள்ளது?

அதிகமான அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் எவ்வாறு காட்சி தரும் என்பது தொடர்பான பிம்பங்களைக் கொண்டுள்ளன. மேலும் அபிவிருத்தி இடம்பெறுகின்ற பிரதேசங்களையும் அவை சுட்டிக்காட்டுகின்றன. கூகுள் வரைபடங்கள் போன்ற கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலமாக முதன்மைத் திட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அதே இடங்களை நீங்கள் பார்த்து நீங்கள் இப்போது காண்பவற்றுடன் அதனை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். நீங்கள் கட்டாயம் கேட்க வேண்டிய வினாக்களில் உள்ளடங்குபவை

உத்தேசத் திட்டமானது சுற்றாடல் ரீதியாக நுண்மைத்தன்மை மிக்க பிரதேசங்களில் அல்லது பிரதேசங்களுக்கு அருகில் புதிய உட்கட்டமைப்புகளை அல்லது கட்டிடங்களைக் கொண்டுள்ளதா? இவை ஏற்கனவே வீடுகள் அல்லது விவசாய நிலங்கள் உள்ள இடங்களில் அமைந்துள்ளனவா? வீதியோர வியாபாரிகள் எங்கே செல்வர்? உத்தேசத் திட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் இவ்வாறான கட்டமைப்புகளுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியவையா?

புதிய திட்டங்களை சாத்தியமானதாக ஆக்குவதற்கு பிரதேசத்திலே வேறு என்ன மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்,? உதாரணமாக, சில வேளைகளில் புதிய வீதி அல்லது அதிவேக நெடுஞ்சாலை உத்தேசத் திட்டத்தினை இயலுமாக்குவதற்காக நிர்மாணிக்கப்பட வேண்டியதாக இருக்கும். காணி கொள்ளலும் நிர்மாணிப்பும் மக்களின் வீடுகளையும் அவர்களின் வாழ்வாதாரங்களையும் அவர்களிடமிருந்து அகற்றுகின்றதா?



## 6. அமைவிடங்களைப் பரிசீலித்தல்.


சில திட்டங்கள் மக்களை அவர்களின் காணிகளிலிருந்து நகர்த்துவதைத் தேவைப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் அதற்கு ஒப்பான பிரச்சினைகளை அவை கொண்டிருக்கும் விதத்தில் புதிய கட்டிடங்களை அல்லது உட்கட்டமைப்புகளை அவை முன்மொழியக்கூடும். உதாரணமாக, கொழும்பிலே மரக்கறி, பழம் மற்றும் மீன் மொத்த வியாபார நிலையம் புறக்கோட்டையிலிருந்து 2021 ஆம் ஆண்டு பேலியகொடைக்கு மாற்றப்பட்டது. புதிய சந்தையானது மிகவும் பெரியதாகவும் வெற்றுக் காணியில் நிர்மாணிக்கப்பட்டதாகவும் அதிக வசதிகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. எவ்வாறாயினும் புதிய சந்தையானது பொதுப் போக்குவரத்துடன் இணைக்கப்படவில்லை என்பதுடன் மரக்கறிச் சந்தையானது இயற்கை வெளிச்சம் கிடைக்கும் வகையில் நிர்மாணிக்கப்படாததால் வியாபாரிகள் நாள் முழுவதும் விளக்குகளை எரியவிட வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்துடன் கடைகளின் அளவும் சிறியதாக இருப்பதால் உரிய களஞ்சியப்படுத்தல் வசதிகள் இல்லாமல் இருப்பதுடன் குளிரூட்டலுக்கான வசதிகளும் இல்லாமலிருக்கின்றன. மேலும் டிரக்குகளிலிருந்து கடைகளுக்குப் பொருட்களைப் போக்குவரத்துச் செய்வதும் இலகுவானதாகக் காணப்படவில்லை. இதன் அர்த்தம், வியாபாரிகளின் செலவுகள் அதிகரித்து, அவர்கள் வாடிக்கையாளர்களையும் இழந்து அவர்களின் வருமானமும் குறைவடைந்துள்ளது என்பதேயாகும்.



## 7. சமுதாயங்களோடு சேர்ந்து திட்டமிடுதல்:

பிரதேசத்திலே வாழ்கின்ற மக்களும் அப்பிரதேசத்தில் உள்ள இடங்களை நேரடியாகப் பயன்படுத்துபவர்களும் அந்தக் காணியினை நன்கு புரிந்து கொள்கின்றனர். வரைபட ஒப்பீட்டுச் செயற்பாட்டினை நடத்தி, முதன்மைத் திட்டங்களின் சம்பந்தப்பட்ட பகுதிகளை இவர்களுடன் சேர்ந்து வாசித்து, உத்தேச முதன்மைத்

திட்டத்தினை அமுல்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் நுண்ணிய விபரங்களையும் புரிந்துகொள்ள முயற்சிக்கவும். இந்தச் செயற்பாட்டிலே பல்வேறு வகையிலான மக்களை ஈடுபடுத்துவது பயன்மிக்கதாகும் - பெண்கள், சிறுவர்கள், வெவ்வேறு வயதுக் குழுவினைச் சேர்ந்த மக்கள், வெவ்வேறு தொழில்களைப் புரிகின்ற மக்கள் ஆகியோர் இதன் மூலம் உத்தேசத் திட்டங்களை மிகவும் பூரணமான முறையில் புரிந்துகொள்ள முடியும்.



## 8. மாற்றுத் திட்டங்களைக் கொண்டு வருதல்.

முதன்மைத் திட்டத்தின் வகையில் சார்ந்துள்ளவாறாக திட்டங்களைச் சிலவேளைகளில் ஒரேயடியாக நிராகரிப்பதை விட அவற்றினை மேம்படுத்துவது பயன்மிக்கதாக அமையலாம். பாதிக்கப்படுகின்ற சமுதாயங்களுடன் கலந்தாலோசிப்பதன் மூலமாகவும் சட்டத்தரணிகளுடனும் விடயத்திலே நிபுணர்களாக இருப்பவர்களுடனும் திட்டமிடுபவர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள் போன்ற தொழில்முறையானவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமாகவும் தொழில்நுட்ப விடயங்களிலும் வரைபடங்களிலும் உதவியினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் பிரஜைகளின் உண்மையான தேவைகளைப் பிரதிபலிக்கின்ற இதே பலாபலன்களை அடைவதற்கான சிறந்த முறையினையும் பெற்றுக்கொண்டு மக்களுக்கும் சூழலுக்கும் தீங்கு ஏற்படுத்தாத வகையிலும் ஏற்கனவே உத்தேசிக்கப்பட்ட திட்டம் ஏற்படுத்துகின்ற பாதகமான தாக்கங்களைத் தவிர்க்கக்கூடிய விதத்திலும் திட்டங்களை மாற்றியமைக்க முடியும். இதனை நிறைவேற்றுவதற்கு நாங்கள் ஏனைய நகரங்கள் அல்லது நாடுகளின் அனுபவங்களினைப் பார்த்து எமது உத்தேச முதன்மைத் திட்டத்தினைப் பற்றி மீளாய்வு செய்வதற்கு அவற்றிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். ஏனைய நகரங்களில் அல்லது நாடுகளிலிருந்து பெற்ற சம்பவக் கற்கைகளை ஆராய்வதானது, நாம் ஏன் ஒரு திட்டத்தினை நிராகரிக்கின்றோம் அல்லது ஏன் மாற்றுத் திட்டத்தினை முன்மொழிகின்றோம் என்பதை விளக்குவதற்கு மிகவும் செயன்திறன் மிக்கதாக அமையும்.



## 9. செயற்திறன்மிகு பிரச்சாரத்தினைக் கட்டியெழுப்புதல்.

நீங்கள் முதன்மைத் திட்டத்தினை நிராகரித்தாலோ அல்லது மேம்படுத்த முயற்சித்தாலோ செயற்திறன்மிகு பிரச்சாரத்திற்காகச் சில பிரதான கூறுகள் காணப்படுகின்றன. முதலாவதாக நீங்கள் உங்களது பிரச்சாரத்தை தொடக்குவதற்கு அடிப்படையாகக்

கொண்டுள்ள தகவல்கள் துல்லியமானதாகவும் இற்றைப்படுத்தப் பட்டவையாகவும் மக்களைப் பற்றியதாகவும் இருக்க வேண்டும். சில வேளைகளில் எல்லாத் தகவல்களையும் எம்மால் உரிய நேரத்திலே பெற்றுக்கொள்ள இயலாமல் இருக்கலாம். மேலும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்களிடமிருந்தும் சமுதாயங்களிடமிருந்தும் பெறுகின்ற தகவல்கள் தாக்கங்களைக் கோடிட்டுக் காட்டுவதற்கு முக்கியமானதாக அமையும். வினாக்கொத்துக்கள் மற்றும் பங்கேற்புமிகு முறையிலான விளையாட்டுக்கள் போன்றவற்றினைப் பயன்படுத்தி தகவல்களைச் சேகரிப்பதற்கு நீங்கள் தரவுச் சேகரிப்பு கருவிகளைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் சேகரிக்கின்ற தகவல்கள் ஒரு சிக்கலான கதையினைக் கூறக் கூடியதாக இருக்க வேண்டும். குறிப்பாக, தாக்கங்களைப் பற்றி பேசும்போது இத்தனை மக்கள் அவர்களின் வீடுகளை இழப்பார்கள் அல்லது பல வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படும் எனக் கூறுவது போதுமானதாக இருக்காது. கூறுகின்ற கதையானது எவ்வாறு உடைமைகள் அகற்றப்படுதலும் வருமான இழப்பும் அடுத்த தலைமுறையும் அவர்களின் கல்வியும் பாதிக்கப்படுவதற்கு வழிவகுக்கும் என்பதையும் அது எவ்வாறு குடும்பங்களின் போசணை மற்றும் சுகாதாரம் ஆகியன பாதிக்கப்படுவதற்கு இட்டுச்செல்லும் என்பதையும் கூற வேண்டும். அத்துடன் வாழ்வாதாங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் எவ்வாறு பரந்த பெறுமதிச் சங்கிலியிலும், சமூகப் பாதுகாப்பிலும், காலநிலை மாற்றத்திலும் அல்லது உணவுச் சூழலிலும் தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்பதையும் கூற வேண்டும்.

உதாரணமாக, கொழும்பு நகரத்திலே நாங்கள் உயர்ந்த வருமானம் பெறும் சமுதாயங்களின் மீது உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றிப் பேசும்போது எத்தனை மக்கள் அவர்களின் வீடுகளை இழந்துள்ளனர் எனக் குறிப்பிடுகின்றோம். ஆனால், மொத்த வியாபாரச் சந்தைகளை நகர்த்தியமையானது, புதிய உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரித்து அதனால் சமுதாயங்கள் அவற்றினை வாங்குவது கடினமாகியுள்ள காரணத்தினால் எவ்வாறு சமுதாயங்களின் போசணை பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் இவ்வாறு வேறு இடத்திற்கு அவற்றினை நகர்த்தியமையானது அவர்கள் பாடசாலைக்கும் வேலைத் தளத்திற்கும் செல்வதற்கு ஏற்படும் செலவுகளை எவ்வாறு அதிகரித்துள்ளதென்பதையும் அவர்கள்

முன்பு உணவு நுகர்விற்காக செலவளித்த பணத்தினை இப்பொழுது பயணத்திற்காகச் செலவளிக்க நேரிட்டுள்ளது என்பதையும் போக்குவரத்திற்குப் பணம் செலவளிக்க முடியாத காரணத்தினால் அவர்கள் தங்களது பிள்ளைகளை ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குத் தற்போது அனுப்புவதில்லை என்பது பற்றியும் நாங்கள் பேசுகின்றோம்.



## 10. நேசக் கூட்டுக்களைக் கண்டுபிடித்தல்.

பெரும்போக்கு ஊடகமாக இருந்தாலும் அல்லது சமூக ஊடகமாக இருந்தாலும் அல்லது நாட்டில் ஏனைய பகுதிகளிலே ஒரே விதமாகப் பாதிக்கப்பட்ட குழுக்களாக இருந்தாலும் உங்களின் பிரச்சாரத்தினை ஓங்கச் செய்யக்கூடிய நேசக் கூட்டுக்களை கண்டுபிடிப்பது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் இவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். இதே போன்று அபிவிருத்திக் கருத்திட்டங்களை அனுபவித்த ஏனைய சமுதாயங்களிடமிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதையும் பார்க்க வேண்டும். தற்போது காணப்படுகின்ற பிரச்சாரங்களை அல்லது இதே போன்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பரந்த கூட்டமைப்பினை உருவாக்குவதற்காக நாம் எவ்வாறு எமது பிரச்சாரங்களுடன் இணைக்க முடியும். ஒரு பிரச்சாரத்தினை நிலைபேறானதாக ஆக்கி அதனைக் கட்டியெழுப்புவதைத் தனிமையில் செய்வது கடினமான ஒன்றாகும் என்பதுடன் ஏனைய வலையமைப்புகளுடனும் பிரச்சாரங்களுடனும் அதனை இணைப்பது பயன்மிக்கதாகும்.

# வெளியேறுமாறு உங்களிடம் கேட்கப்படுகின்றதா?

## நடைமுறை ரீதியான நடவடிக்கைகளும் உங்களின் உரிமைகளைப் பெறுவதற்கான பதிற்செயற்பாடுகளும்



விரைவாகச் செயற்பட்டு, வெளிப்படையாகப் பேசி, உங்கள் காணி உங்களிடம் மீள ஒப்படைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அல்லது மாற்றுக் காணி ஒன்றைப் பெற்று இழந்த சொத்திற்காக நட்டஈட்டைப் பெறுவதற்காக உதவியினை நாடவும்.

சகல பரிகார நடவடிக்கைகளையும் துரிதப்படுத்த உங்களின் உரித்தாண்மையினை நிரூபிப்பதற்கான துல்லியமான தகவல்களும் ஆவணப்படுத்தல்களும் உங்களிடம் உள்ளன என்பதை உறுதிப்படுத்துங்கள். உங்களின் காணிக்கான செல்லுபடியாகத்தக்க ஆவணங்களைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும். தேவைப்படுத்தப்படும் ஆவணப்படுத்தல் உங்களிடம் இல்லையென்றால், சம்பந்தப்பட்ட ஆவணங்களை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பில் சட்ட ஆலோசனையினைப் பெறுவதை உறுதிப்படுத்துங்கள்.

எந்தக் காணியில் இருந்து உங்களை வெளியேறுமாறு கேட்கப்படுகின்றதோ அந்தக் காணி உங்களுக்குச் சொந்தமானதாக இல்லாவிடினும் கூட, உங்களை நிர்க்கதிக்கு ஆளாக்காமல் இருப்பதற்காக உங்களுக்கு மாற்றுத் தங்குமிட வசதியினை வழங்குவதற்கான அத்துடன் ∴ அல்லது நட்டஈட்டினை வழங்குவதற்கான பொறுப்பினை அரசு இன்னும் கொண்டுள்ளது. இது நீங்கள் அக்காணியில் குடியிருந்த கால அளவு மற்றும் தன்மை உள்ளிட்ட சம்பவத்தின் காரணங்கள் மற்றும் சூழ்நிலைகளைச் சார்ந்துள்ளது என்பதுடன் உங்களின் உரிமைகளை எவ்வாறு சிறப்பாகப் பாதுகாக்கலாம் என்பது தொடர்பில் நீங்கள் கட்டாயம் சட்ட ஆலோசனைகளையும் ஏனைய ஆலோசனைகளையும் கோர வேண்டும். அரசியலமைப்பின் கீழ் தனியார் சொத்திற்கான அல்லது தங்கிடத்திற்கான உரிமைகள் வெளிப்படையாக வழங்கப்படவில்லை என்பதையும் இதனால் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் விடயம் எவ்வாறு பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்படுகின்றது என்பதிலும் விடயம் நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டால் அங்கே விடயம் எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதிலுமே இது தங்கியுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும்.



உரித்தாண்மையினை நிரூபிக்கையில், அறுதியுறுதி இல்லாத ஆட்கள் சில வேளைகளில் வரிக் கொடுப்பனவுகள் மற்றும் நீர், மின்சாரம், பச்சை அட்டை போன்றவற்றுக்கான கட்டணப் பட்டியல்களையும் அவர்களின் குடியிருப்பினை நிரூபிப்பதற்கான வாக்காளர் பதிவுப் படிவம் உள்ளிட்ட ஏனைய ஆவணப்படுத்தல்களையும் தம் வசம் வைத்திருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய சட்டத்தின் கீழ், இந்த ஆவணங்கள் காணிக்கான எவ்விதமான உரிமையினையும் பெற்றுத் தரா.



சகல சம்பந்தப்பட்ட தகவல்களையும் உங்களுக்கு வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வாய்மூலமான மற்றும் எழுத்திலான வேண்டுகோள்களை விடுக்கவும். தகவல்கள் எழுத்தில் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தவும்.

- உங்களிடம் வெளியேறுமாறு கேட்பது யார் (அது ஓர் அரச நிறுவனமா அது ஒரு நீதிமன்றமா, ஒரு தனிப்பட்ட நபரா?)

- அதிகாரம் குறிப்பிடுகின்ற எவ்விதமான வர்த்தமானியினதும் அறிவித்தலினதும் அரசாங்க அதிகாரத்தின் தீர்மானத்தினதும் பிரதியினைக் கேளுங்கள்.

- ]உங்களின் காணி ஏன் பாதிக்கப்பட்டுள்ளது.∴ வெளியேற்றலுக்கான காரணம்? அரசினால், ஒரு பொது நோக்கத்திற்காக, காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் மாத்திரமே தனியார் காணியினை எடுக்க முடியும். காணியினை எடுக்கும் சந்தர்ப்பத்தில் எடுப்பதன் நோக்கத்தினை வெளிப்படுத்தாமல் இருப்பதே அரச நடைமுறையாக இருந்தாலும், பொது நோக்கமானது வெளிக்கூறப்பட வேண்டும் என்றும் நோக்கமானது பொதுமக்களுக்கு நன்மையளிக்க வேண்டுமெனவும் இலங்கை நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியுள்ளன. எனவே, பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் பொது நோக்கத்தினை அரச அதிகாரம் வெளிக்கூற வேண்டும் என்பதை ஆரம்பத்தில் இருந்து கோருவது முக்கியமானது என்பதுடன் இதனால் உங்களின் ஆட்சேபனைகளைத் தெளிவாக முன்வைக்க முடியும்.

- வேறு இடத்தில் குடியேறுவதற்கு அரசாங்க அதிகாரம் ஏற்பாடு வழங்குகின்றதா எனக் கேட்கவும். அவ்வாறு வழங்கியிருந்தால், மாற்றுத் தங்குமிட வசதி அல்லது மாற்றுக் காணி வசதி ஆகியவற்றின் வகைகளின் விபரங்கள், பெறுமதி, மற்றும் சேவைக்கான அணுகல் விபரங்கள் ஆகியவற்றினைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது, நீங்கள் விட்டுக் கொடுக்கும் காணியும் சொத்தும் நீங்கள் பதிலாகப் பெறுபவற்றினை விட அதிகமான பெறுமதியுடையவை என்பதை உங்களால் எடுத்து விளக்கக் கூடியதாக இருக்கும்.

- எவ்வளவு நட்டஈடு? அது எவ்வாறு கணக்கிடப்படும்? கூட்டு உரித்தாண்மையினை அது கருத்தில்கொள்ளுமா? (வேறு இடத்தில் குடியேறுவதற்கும் பிரயோகிக்கத்தக்கது). நட்டஈடு உரிய நேரத்திலும் வெளிப்படையான முறையிலும் செலுத்தப்படுமா?

ஏதாவது ஆவணத்தில் கைச்சாத்திடுமாறு உங்களிடம் கேட்கப்பட்டால், அது நீங்கள் புரிந்துகொள்ளும் மொழியில் உள்ளது என்பதை உறுதிப்படுத்தி நீங்கள் அதைக் கவனமாக வாசித்து, உங்களின் பதிவுக்காக ஆவணங்களின் பிரதிக்காக வேண்டுகோள் விடுங்கள். உங்களுக்குப் புரியாத எந்த ஆவணத்திலும் நீங்கள் கைச்சாத்திடக் கூடாது என்பதுடன் கைச்சாத்திட முன்னர் உங்களின் தெரிவுக்குரிய வழக்கறிஞரின் அல்லது வேறு யாராவது நபரின் ஆலோசனையினைக் கோருவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. தற்போதைய அரசியலமைப்பின் கீழ் (உறுப்புரை 22(2)இ உங்களின் தெரிவுக்குரிய மொழியில் எவ்விதமான உத்தியோகபூர்வ ஆவணத்தினையும் பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு என்பதுடன் அது சிங்களம் அல்லது தமிழ் மொழியாக இருக்கலாம் என்பதுடன் நிர்வாக மொழி சிங்களமாக இருந்தாலும் (கொழும்பைப் பொறுத்த அளவில்) கூட இதை நீங்கள் பெறலாம். அசலான ஆவணம் உங்களின் விருப்பத்திற்குரிய மொழியில் வழங்கப்பட வேண்டும் எனக் கேட்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு அல்லது மொழிபெயர்ப்பினைக் கேட்பதற்கான உரிமை உங்களுக்கு உண்டு. எந்தவொரு உத்தியோகபூர்வ ஆவணத்தினையும் நீங்கள் பரிசோதிக்க விரும்பினாலும் இந்த உரிமை பிரயோகிக்கத்தக்கதாகும்.

நடைமுறை ரீதியில், நீங்கள் கைச்சாத்திடும் எந்தப் படிவமும் உங்களின் நோக்கத்தினைத் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றது என்பதையும் அது உங்களின் உரிமைகளைக் கீழறுக்கவில்லை என்பதையும் நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக, ' மாற்றுக் காணியினைக் கோருவதற்கான வேண்டுகோள்' என்ற வடிவில் ஒரு படிவம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அபிவிருத்திக்கென அடையாளமிடப்பட்டுள்ள காணிச் சொந்தக்காரர்களின் மத்தியில் விநியோகிக்கப்படல். மாற்றுக் காணிகளுக்காக மக்கள் தங்களின் சொத்தினைச் சுய விருப்பத்துடன் விட்டுச் செல்கின்றனர் என்கின்ற கருத்தினையே அவ்வாறான படிவம் வழங்குகின்றது. இறுக்கமான முறையில் சட்டவிரோதமானது அல்ல என்றாலும், தாங்கள் கைச்சாத்திடுகையில் படிவத்தின் நோக்கம் மற்றும் விளைவுகள் பற்றித் தங்களுக்குப் பூரண தகவல்கள் வழங்கப்படவில்லை எனக் கைச்சாத்திட்டவர்களில் பலர் குறிப்பிடுகின்றனர். ஆவணத்தின் பிரதியொன்றினை எடுப்பதற்கு உங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் எனக் கேட்பதும் நீங்கள் எதிலும் கைச்சாத்திட முன்னர் ஆலோசனை கோருவதும் நியாயமானதாகும்.

ஆட்சேபனை எழுப்பல். உங்களை எழும்புமாறு கேட்கும் அரச நிறுவனத்திடம் நீங்கள் ஆட்சேபனை எழுப்பலாம் என்பதுடன் நீதிமன்றக் கட்டளையிருந்தாலும் ஆட்சேபனை எழுப்பலாம். இயலுமான அளவு விரைவாக எழுத்திலான முறைப்பாடுகளைத் தாக்கல் செய்யுங்கள், தாமதங்கள் உங்களின் உரிமைகளை மோசமாகப் பாதிக்கலாம்.

அரசு உங்களை நியாயமின்றி நடத்தியுள்ளது அல்லது சட்டத்திற்கு அமைவாக நடத்தவில்லை என நீங்கள் நம்பினால் - இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு முறைப்பாட்டினைத் தாக்கல் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (உங்களின் முறைப்பாடு உத்தியோகபூர்வமாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மற்றும் நீங்கள் பின்னாட்களில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவினைத் தாக்கல் செய்ய விரும்பினால் அதனை இது இயலுமாக்கும்). அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் எவையும், உரிமைகள் மீறப்பட்டதில் இருந்து ஒரு மாதத்தினுள் தாக்கல் செய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும், இதே விடயம் பற்றிய முறைப்பாடு தொடர்பாக மனித உரிமைகள்

ஆணைக்குழுவினால் விசாரணை நடத்தப்படுகையில் இந்தக் கால வரம்பு இடைநிறுத்தப்படுகின்றது.

அரசின் எந்த ஒரு தனிநபரினதும் அல்லது நிறுவனத்தினதும் வாய்மூல உத்தரவாதங்களோ அல்லது வாக்குறுதிகளோ நீதிமன்றத்தில் கருத்திற்கொள்ளப்படுவதில்லை. சம்பந்தப்பட்ட சகல விடயங்களிலும் எழுத்திலான தொடர்பாடல்களை நீங்கள் பெற்றுக்கொள்கின்றீர்கள் என்பதை நீங்கள் உறுதிப்படுத்துவது சிறந்ததாகும். எவ்விதமான உத்தியோகபூர்வ முறைப்பாட்டினையும் மேற்கொள்ள வேண்டாம் அல்லது வழக்கினைத் தாக்கல் செய்ய வேண்டாம் அப்போது உங்களின் விடயம் தீர்க்கப்படும் என்றும் உங்களுக்குக் கூறப்படலாம். முறைப்பாட்டினைத் தாமதிப்பது சட்ட ரீதியில் இடர்மிக்கதாகும். உங்களின் குறைக்கு அரசு வழங்கும் தீர்வினையிட்டு நீங்கள் பின்னர் திருப்தியுற்றால் உங்களின் எந்த முறைப்பாட்டினையும் வாபஸ் பெறுவதற்கான உரிமை உங்களுக்கு எப்போதும் உண்டு.

# தகவலறியும் உரிமைக்கான விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்தல்



## தகவலறியும் உரிமை என்றால் என்ன?

தகவலறியும் உரிமை என்பது அரசாங்க அதிகார அமைப்புக்களிடம் இருக்கும் தகவல்களைப் பெறுவதற்கான உங்களின் அடிப்படை உரிமையாகும்.

நாட்டின் பிரசைகளுக்காக அரசாங்க அதிகார அமைப்புக்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட ஏராளமான தகவல்கள் உள்ளன. பிரசைகள் என்ற ரீதியில் இத்தகவல்களை அணுகுவதற்கான அடிப்படை உரிமை உங்களுக்கு உண்டு. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவலறியும் சட்டம் 2016 ஆகஸ்ட் 4 அன்று நிறைவேற்றப்பட்டதுடன் பிரசைகள் தகவல்களை அணுகுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செயன்முறையினை இது வழங்குகின்றது. சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகார அமைப்பிடம் வேண்டுகோள் ஒன்றினை விடுக்கின்ற ஓர் எளிய செயன்முறையாக இது காணப்படுகின்றது. சாதாரண செயன்முறையின் மூலம் ஆகக்கூடுதலாக 28 நாட்களினுள் உங்களுக்குரிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும் (தகவல்கள் ஏராளமானவையாக இருப்பின், அல்லது வேறு ஓரிடத்தில் இருந்து பெறப்பட வேண்டியதாக இருப்பின், அதற்கு இன்னும் 21 நாட்கள் எடுக்கலாம்). நீங்கள் கோருகின்ற தகவல்கள் உங்களின் தனிப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டியதில்லை. வேறு எந்தப் பொதுத் தகவலையும் நீங்கள் கோர முடியும். இது உங்களைப் பொறுத்த அளவில் ஓர் உரிமையும் அதேபோல் பொறுப்புமாகும். தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக, நீங்கள் உங்களுக்காகவும் பொது நலனுக்காகவும் உங்கள் அயலவர்களுக்காகவும் சமுதாயத்திற்காகவும் அல்லது நாட்டிற்காகவும் தகவல்களைக் கோருவதன் மூலம் ஆளுகையில் பங்குபற்ற முடியும். நீங்கள் கோருகின்ற தகவல்கள், பதிவுகள், ஆவணங்கள், ஞாபகக் குறிப்புக்கள், மின்னஞ்சல்கள், அபிப்பிராயங்கள், ஆலோசனை, பத்திரிகை அறிக்கை, சுற்றுநிருபங்கள், கட்டளைகள், பதிவுப் புத்தகங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், கட்டுரைகள், மாதிரிகள், பிரதிகள், தொடர்பாடல்கள், விஞ்ஞாபனங்கள், வரைபுச் சட்டவாக்கம், நூல், திட்டம், வரைபடம், வரைபு, படம், வரைபு வேலைகள், பிம்பம், நுண் படம், ஒலிப் பதிவு, வீடியோ டேப், இயந்திரத்தால் வாசிக்கக்கூடிய பதிவு, கணினிப் பதிவுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள், அவற்றின் பௌதிக ரீதியான வடிவம் அல்லது பண்பினைப் பொருட்படுத்தாது எவ்வடிவிலும் பதியப்பட்டிருக்கும் விடயங்கள் பற்றிய தகவல்களாக இருக்கலாம்.

தகவல்களைக் கோருவதற்கான காரணங்களை நீங்கள் வழங்க வேண்டிய அவசியமில்லை என்பதுடன் உங்களிடம் இருந்து காரணம் கேட்கப்படவும் முடியாது. நிரப்புவதற்கெனக் குறிப்பிட்ட படிவங்கள் எதுவும் இல்லை என்பதுடன் தகவல்கள் பற்றிய விபரங்களையே நீங்கள் வழங்கவேண்டும் மேலும் அது உங்களுக்கு எவ்வடிவில் தேவைப்படுகின்றது என்பதையும் என்ன மொழியில் தேவைப்படுகின்றது என்பதையும் எழுத்திலா அல்லது இலத்திரனியல் வடிவிலா தேவைப்படுகின்றது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

## யாரிடமிருந்து நான் தகவல்களைக் கோர முடியும்? நான் யாரிடம் செல்லவேண்டும்?

ஒவ்வொரு அரச அதிகார அமைப்பிலும் உள்ள தகவல் அதிகாரி.

## அரச அதிகார அமைப்புக்கள் என்பவை என்ன?

அரசியலமைப்பின் கீழ் அல்லது ஏதாவது எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட யாராவது நபர், அலுவலகம், அல்லது நிறுவனம் அல்லது திணைக்களம் அல்லது அதிகார அமைப்பு மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உரிமத்தின் கீழ் இயங்கும் தனியார் அமைப்பு அல்லது அதிகார அமைப்பு அல்லது பொதுச் செயற்பாட்டினை அல்லது சேவையினை வழங்கும் அமைப்பு:

- அமைச்சுக்கள்
- அரசாங்கத் திணைக்களங்கள்
- அரச கூட்டுத்தாபனங்கள்
- உள்ளூராட்சி அதிகாரசபைகள்
- அரச நிதியிடப்படும் உயர் கல்வி நிறுவனங்கள்
- சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள், குறிப்பிட்ட அளவுக்கு அரசால் நிதி வழங்கப்படுபவை

## இச்சட்டத்தின் கீழ் எங்களால் முறைப்பாடு செய்ய முடியுமா, எவ்வாறு?

ஆம்.

தகவல் அதிகாரி அல்லது இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரி வேண்டுமென்றே தகவல்களை வழங்கத் தவறினால் அல்லது இச்சட்டத்தினால் ஏற்பாடு வழங்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றத் தவறினால், பிரசைகள் தகவலறியும் உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியும் என்பதுடன் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரத்துக்கு அது பணிப்புரை வழங்க முடியும். ஒழுக்காற்று அதிகாரம் ஒரு மாதத்தினுள் ஆணைக்குழுவிற்கு மீண்டும் அறிக்கையிட வேண்டும். மிகவும் பாரதூரமான தவறாக இருப்பின், அதாவது தகவல்களை அழித்தல் அல்லது தவறான தகவல்களை வழங்குதல் போன்றவையாக இருப்பின், ஆணைக்குழு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

## மேன்முறையீடுகள்

## அவர்கள் தகவல்களை வழங்காவிட்டால் என்ன நடக்கும்?

- மறுக்கப்பட்டதில் இருந்து 14 நாட்களினும் இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் நீங்கள் மேன்முறையீடு செய்ய முடியும்.
- விண்ணப்பதாரி அவரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் பதினான்கு நாட்களினுள் விண்ணப்பிக்கத் தவறினால், இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரி, தாமதத்திற்கான நியாயமான காரணங்கள் வழங்கப்படுகையில் விண்ணப்பத்தினை ஏற்றுக்கொள்வார்.
- இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரி அவரின் தீர்மானத்தினை 2 வாரங்களினுள் வழங்க வேண்டும்.
- அவர்கள் தீர்மானம் வழங்கத் தவறினால் அல்லது மறுத்தால், நீங்கள் தகவலறியும் ஆணைக்குழுவிற்கு 2 மாதங்களினுள் விண்ணப்பிக்க வேண்டும்.
- ஆணைக்குழுவின் தீர்மானம் 30 நாட்களினுள் வழங்கப்பட வேண்டும் - வழங்கப்பட்ட தீர்மானம் இதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரியின் அல்லது தகவல் அதிகாரியின் தீர்மானத்தினை உறுதிப்படுத்தலாம் அல்லது அதற்கு மாறானதாக இருக்கலாம் அல்லது அதனை மறுதலையாக்கலாம்.
- ஆணைக்குழுவின் தீர்மானம் கிடைத்த 1 மாதத்தினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

(மூலம்: ஆர்டிஐ வோச், இலங்கை டிரான்பேரன்சி இண்டர்நேசனல்)

# தகவல்களுக்கான வழங்கல்



அபிவிருத்திக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய தகவல்களை அரசாங்க அமைச்சுக்களின் இணையத்தளங்களின் மூலமாகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை இணையத்தளம் அல்லது உள்ளூராட்சி இணையத்தளங்கள் போன்ற அரச நிறுவனங்களின் இணையத்தளங்களின் மூலமாகவும் அணுக முடியும். தகவலறியும் சட்டத்தின் ஊடாகவும் நீங்கள் தகவல்களை நேரடியாகக் கோர முடியும்.

அதிக தகவல்களைப் பெறுவதற்கு பயன்மிக்கதான ஏனைய சில வளங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

1. வர்த்தமாணி, ஹன்சாட் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் போன்ற அரசாங்க ஆவணங்கள் பல பயன்மிக்க தகவல்களைக் கொண்டுள்ளன. பிரதேசத்தின் பெயர், கருத்திட்டத்தின் பெயர் அல்லது ஏதாவது குறிப்பிட்ட தகவல்கள் போன்ற பிரதான சொற்களைத் தேடலுக்கு பயன்படுத்துவது சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரலாம்.

http://documents.gov.lk/
https://www.parliament.lk/business-of-parliament/hansards
http://auditorgeneral.gov.lk∴

2. மேலே குறிப்பிடப்பட்டவாறு பல்தரப்பு வங்கி இணையத்தளங்கள் அவற்றினால் நிதி வழங்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்களை வழங்கக் கூடிய ஏனைய மூலங்களாகக் காணப்படுகின்றன. இவை உங்களுக்கு அதிக தொழில்நுட்ப ரீதியானதாக அமைந்திருந்தால் இந்த விடயங்களில் நிபுணத்துவம் பெற்ற சிவில் சமூகக் குழுக்களை நீங்கள் அணுகலாம். ஊதாரணமாக, யுனுடீ அல்லது யுஐஐடீ நிதியிடும் கருத்திட்டங்களுக்காக நீங்கள் யுனுடீ பற்றிய பேழு மன்றத்தினை அணுக முடியும். (https://www.forum-adb.org/) இது மனிலாவினைத் தளமாகக் கொண்ட ஒரு குழுவாகும். மேலும் உலக வங்கிக் கருத்திட்டங்களுக்கு வங்கித் தகவல் மையத்தினை அணுக முடியும். இது வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட குழுவாகும். (http://bankinformationcenter.org) அத்துடன் இந்தியாவில் நிதி வகைப்பொறுப்பிற்கான மையத்தையும் அணுக முடியும் (https://www.cenfa.org).

உலக வங்கிக் கருத்திட்டங்கள் - https://projects.worldbank.org/en/projects-operations/projects-home

ஆசிய அபிவிருத்தி வங்கிக் (ADB) கருத்திட்டங்கள் - https://www.adb.org/projects, https://www.adb.org/projects/documents

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக் (AIIB) கருத்திட்டங்கள் - https://www.aiib.org/en/projects/list/index.html

3. சீனா மற்றும் சீன வங்கிகளினால் வெளியிடப்படும் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்களுக்கு https://china.aiddata.org/

4. நீங்கள் தேடுகின்ற தகவல்கள் அல்லது இணையத்தளங்கள் எங்கேயும் அணுக முடியாதவையாக இருப்பின் நீங்கள் தேடுகின்ற இணையத்தளங்களை வழங்கக்கூடிய றுயல டீயஉம ஆயஉாநைெ என்கின்ற இணையத்தளம் இவற்றுக்கான சுவடிகளைக் கொண்டுள்ளது. - https://archive.org/web/

நீங்கள் தேடுகின்ற இலங்கை இணையத்தளங்களை றுயல டீயஉம ஆயஉாநைெ கொண்டிராவிட்டால் இன்று அடைவதற்கு இல்லாமலிருக்கின்ற அரசாங்கத்தினதும் சிவில் சமுகத்தினதும் இலங்கை இணையத் தளங்களின் சுவடிகளை றுநடிளவைநள யவ சுளைம கொண்டுள்ளது. - https://sitesatrisksl.wordpress.com/

People's Alliance for Right to Land

No. 3 Kynsey Terrace,
Colombo 08,
Sri Lanka.

+94 77 232 3277(Hotline / Whatsapp)

@ParlSl

parlnetworksl@gmail.com